5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1974)

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I beg to move—

" That this House concurs with the Legislative Assembly in setting up a Joint Select Committee of both Houses consisting of 30 Members (20 Members from the Legislative Assembly and 10 Members from the Legislative Council) to consider the Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Thiru S.A. Rajamanickam
2. Thiru C.V. Rajagopal
3. Thiru Era. Sambasivam
4. Thiru H. L. Murugesan
5. Thiru Dravidamani
6. Thiru K. Rajaram
7. Thiru S.C. Sengottuvelappa Goundar
8. Thiru G. Swaminathan
9. Thiru M.M. Bakkar
10. Thiru Ku. Ma. Balasubramaniam ".

Under the existing law, it has not been possible to give adequate protection to the handloom weavers from competition from power-looms and composite mills and also to ensure adequate supply of yarn to the weavers at reasonable prices. It has, therefore, become necessary to empower the State Government to control the production, distribution and sale of yarn and reserve certain varieties of cloth exclusively for the handlooms in order to protect the handloom industry. The provisions of the Cotton Textiles (Control) Order, 1948, continued in force under the Essential Commodities Act, 1955 have been found to be inadequate to achieve the above objects.

The Bill seeks to achieve the above objects. I request the House, Sir, to accept the motion.

1974 ஏப்ரல் 23] [திரு. செ. மாதவன்]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன் வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 30 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 20, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் 10) கூட்டு ஆய்வுக்குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு இந்த அவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு மேலவையின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்
2. திரு. சி. வி. ராஜகோபால்
3. திரு. இரா. சாம்பசிவம்
4. திரு. எச். எல். முருகேசன்
5. திரு. திராவிடமணி
6. திரு. கே. ராஜாராம்
7. திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்
8. திரு. ஜி. சுவாமிநாதன்
9. திரு. எம். எம். பக்கர்
10. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்"

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப இருப்பதால், அதிகம் பேச விரும்பவில்லை. இரண்டொரு சந்தேகங்களைமட்டும் சொல்ல விரும்புகிறேன். பொறுக்குக் குழுவில் நானும் அங்கத்தினனாக இருப்பதால், மற்ற விஷயங்களையெல்லாம் அங்கேயே பேசிக்கொள்ளலாம். ஒரு அடிப்படை விஷயத்தை மட்டும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவை நாம் சட்டமாக்கிவிட்டால், விசைத்தறியில் வேஷ்டிகள், சேலைகள் முதலியவை உற்பத்தியாவதைத் தடை

செய்து, அவற்றைக் கைத்தறிக்கே ஒதுக்கிவிடுகின்றோம். ஆனால் மகாராஷ்டிராம் போன்ற மற்ற மாநிலங்களிலிருந்து விசைத் தறிகளிலோ அல்லது காம்போசிட் மில்களிலோ உற்பத்தியாகும் சேலைகள், வேட்டிகள், துணிகள் எல்லாம் நமது மாநிலத்திற்குள் வராமல் தடுக்க வழி இருக்கிறதா? அதற்கு ஏற்பாடு செய்ய நமக்கு சட்டத்தில் இடமிருக்கிறதா? மத்திய சர்க்கார் நமக்கு ஒத்துழைப்புத் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நாம் நிறைவேற்றும் இந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்த, எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறோமோ அது பூர்த்தியடைய வேண்டும். நாம் சட்டம் செய்து விசைத்தறிகள் அல்லது மில்களில் எந்த சாக்குகள் உற்பத்தி செய்யக்கூடாது என்று தடுக்கிறோமோ, அதை அடுத்த மாநிலங்களில் உற்பத்தி செய்து சர்க்கை இங்கே குவித்தால் நேர்மாறான ஒரு நிலைமை இங்கே ஏற்படும். ஆகவே அதற்கெல்லாம் சரியான பாதுகாப்பு அரசு ஏற்பாடு செய்கிறதா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்வது தான் நம்முடைய நோக்கமும். 1952-லே இதைப் போலவே நாம் ஒரு தீர்மானத்தை அனுப்பிய நேரத்திலே, மத்திய அரசு ஒரு உத்தரவினைப்போட்டு, எந்தெந்த மாநில அரசுகள் விரும்புகின்றனவோ அங்கெல்லாம் இந்த இந்த ரகங்களை கைத்தறிக்கு ஒதுக்கலாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் அதை யாரும் அமுல்படுத்தவில்லை. ஆனால் எந்த மாநில அரசாவது அப்படி ஒரு நடவடிக்கையை எடுத்திருந்தால், அதற்கான முயற்சிகளைச் செய்திருந்தால், அதன் காரணமாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல ஒரு நிலை ஏற்பட்டால், என்னவாகும்? சிந்திக்க வேண்டிய விஷயம். நமது நாட்டிலே விசைத் தறி வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அடுத்த மாநில விசைத் தறிச் சரக்குகளை இங்கே விற்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டால், போதுமான பாதுகாப்பு இல்லாது போய்விடும் என்பதால், இந்தக் கொள்கையை இந்திய சர்க்கார் ஏற்று சட்டமாகப் போட்டவுடன் இந்தச் சட்டத்திற்கு விரோதமாக எந்தத் துணி நெய்யப்பட்டாலும் அது இங்கே விற்கப்படக்கூடாது என்பதுதான் நம் நோக்கம். மத்திய அரசு ஒரு குழுவினை நியமித்திருக்கின்றது. அந்தக் குழுவிடம் இந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கின்றது. மத்திய அரசு கொள்கை அளவில் இதை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்.

அவர்களுடைய உத்தரவு நம் நோக்கத்தை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்டதாக இருக்கின்றது. மத்திய அரசு அதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டாலும், அதை அமுல்படுத்த மறுக்கின்றார்கள் அல்லது அச்சப்படுகின்றார்கள். மத்திய அரசை நாம் கேட்பது, இது போலுள்ள சட்டங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டு அகில இந்திய ரீதியாக, சட்ட ரீதியாக அமுல்படுத்த வேண்டும், இல்லையென்றால் எங்கள் மாநிலங்களுக்கு அந்த உரிமையைக் கொடுத்து விடுங்கள் என்பதுதான். இந்த மசோதாவினை மத்திய சர்க்கார் ஏற்று அதற்கு அனுமதி கொடுக்குமா கொடுக்காதா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அவர்கள் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டதை சட்ட ரீதியாக ஒப்புக்கொள்ளவும் நினைக்கின்றார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. யாருக்காவது பயந்து அவர்கள் மறுப்பார்களானால், நமது மாநிலத்திற்காவது அந்த உரிமையைக் கொடுங்கள் என்பதுதான் நம் கோரிக்கை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன்உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) ஆய்வு செய்யும்பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 30 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 20, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் 10) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு இந்த அவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு, மேலவையின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

1. திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்
2. திரு. சி. வி. இராஜகோபால்
3. திரு. இரா. சாம்பசிவம்
4. திரு. எச். எல். முருகேசன்
5. திரு. திராவிடமணி
6. திரு. கே. ராஜாராம்
7. திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்
8. திரு. ஜி. சுவாமிநாதன்
9. திரு. எம். எம். பக்கர்
10. திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்